அமைச்சர் அவர்கள் மேற்படி மாணவர் விடுதியிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தியமைக்க ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீரனூர் மாணவர் விடுதியினுடைய மாணவர்களின் எண்ணிக்கை 50-ஆக இருந்தது. அது 55-ஆக உயர்த்தப்பட்டுள்ளது. விராலிமலையில் அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 100. இலுப்பூரில் அங்கீகரிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 50. இந்த மாணவர்களுடைய எண்ணிக்கையை அங்கீகரிப்பதில் தேவையான அளவு அந்த விடுதிகளிலே மாணவர்களுக்கு வசதிகள் செய்வதற்கு முடியாமல் இருக்கிறது. இந்த விடுதிகளை ஆய்வு செய்து பார்த்ததில் அதிகமாக மாணவர்களைச் சேர்த்தால், மாணவர்கள் தங்குவதற்குத் தேவையான இடவசதிகள் மற்றும் பல்வேறு வசதிகள் இல்லாமல் இருக்கிற காரணத்தினால் மேலும் மாணவர்களைச் சேர்க்க இயலாமல் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10.45

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களின் நலனில் அதிக அக்கறை கொண்ட இந்த அரசு கூடுதலாகக் கட்டிடங்களைக் கட்டி அங்கே மாணவர்களைச் சேர்க்க ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விடுதிகளைப் பொறுத்தவரையில் 10 சதவீதம் மாணவர்களை அதிகப்படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. எனவே, கீரனூர் மாணவர் விடுதியில் கூடுதலாக ஆறு மாணவர்களையும், விராலிமலை மாணவர் விடுதியில் மேலும் 10 மாணவர்களையும், இலுப்பூர் மாணவர் விடுதியில் 5 மாணவர்களையும் சேர்த்துக் கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவருக்கே அதிகாரம் இருக்கிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகுவார்களேயானால் அந்த விடுதிகளின் வசதிகளுக்கு ஏற்ப தேவையான மாணவர்களை அங்கே தேவையான அளவுக்கு அமர்த்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வார்கள். புதிதாகக் கட்டிடங்கள் கட்டுவதற்குப் பல்வேறு விதிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிகளின் அடிப்படையில் அங்கே புதிதாகக் கட்டிடங்கள் கட்ட வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1995 நவம்பர் 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 91 திரு. ஆர். தங்கராஜ், இருக்கையில் இல்லை. (குறுக்கீடு). அவர் ஏற்கெனவே இதே கேள்வியைக் கேட்டு, ஒரு தடவை இருக்கையில் இல்லாததால் எடுக்கப்படவில்லை. அவரே திரும்ப என்னிடத்திலே வந்து கேட்டுக் கொண்டதற்கிணங்க, அவருடைய வேண்டுகோளை ஏற்று இப்போது எடுத்திருக்கிறேன். இன்றும் அவர் அவைக்கு வரவில்லை. (குறுக்கீடு). ஏற்கெனவே கேட்டார். கேட்ட அன்றும் வரவில்லை. திரும்ப எப்படியாவது எடுத்துக்கொள்ளவேண்டுமென்று என்னிடத்திலே வந்து எழுதிக் கொடுத்தார். நானும் அமைச்சரிடத்தில் திரும்பவும் அந்தப் பதிலைக் கொண்டு வாருங்கள் என்று கேட்டு இன்று எடுத்திருக்கிறேன். இன்றும் அவர் அவைக்கு வரவில்லை. இப்போது திரு. கே.கே. சின்னப்பன் கேட்கிறார். திரு. கே. கே. சின்னப்பன், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர். (குறுக்கீடு) உறுப்பினர்கள் எந்த அளவுக்கு இருக்கிறார்கள் பாருங்கள்.

91—

செந்துறையில் பிற்பட்டோர் நலவிடுதி அமைத்தல்

**33659*—திரு. ஆர். தங்கராஜ்:

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஆண்டிமடம் தொகுதி, செந்துறை அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு பிற்பட்டோர் நல விடுதி அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்சமயம் வாய்ப்பில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே.கே. சின்னப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பின் தங்கிய மக்கள், ஆதிதிராவிட மக்கள் வசிக்கின்ற பெரம்பலூர் பாராளுமன்றத் தொகுதியைத் திருவள்ளுவர் மாவட்டமாக

TRUTH ALONE TRIUMPHS

அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு அந்தப் பகுதி மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எங்கள் உடையார்பாளையம் பகுதி என்பது, பெரம்பலூர் பகுதியைச் சார்ந்த பகுதி, பின்தங்கிய மற்றும் ஆதிதிராவிட மக்கள் வசிக்கின்ற பகுதி. குறிப்பாக, அந்தப் பகுதியிலே திடீர் திடீரென்று பல வன்முறைக் கும்பல்களால் கலவரம் வருகிறபோது, அந்தப் பகுதியில் பயிலுகின்ற மாணவ மாணவிகள் மாலைகளிலே வீடு திரும்ப சிரமத்திற்குள்ளாக்கப்பட்டு, நாங்கள் எல்லாம் அந்தப் பகுதி காவல் துறையின் உதவியுடன் அவர்களையெல்லாம் வீட்டுக்கு அழைத்து வந்து விட்டுக்கொண்டு இருக்கிறோம். எனவே மாணவர்களுக்கு என்று தனியாக விடுதி இப்போது திறப்பதற்கு வாய்ப்பு இல்லாவிட்டாலும், அந்தப் பகுதி பெண் குழந்தைகளுக்காவது தனியாக மாணவியர் விடுதியை உடையார்பாளையம் தாலுக்காவில் திறப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் மாணவர் விடுதி திறப்பது குறித்தது மூலக்கேள்வி. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆதிதிராவிட மக்கள் அந்தப் பகுதியில் அதிகமாக இருக்கிறார்கள் என்று......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்றுதான் சொல்கிறார்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: அதற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கேட்கிறார்கள். எனவே, அதுசம்பந்தமாகக் கவனிக்க ஆதிதிராவிடர் நலத்துறை இருக்கிறது. இருந்தபோதிலும், பிற்பட்டோர் நலத்துறையைப் பொறுத்தவரையில், புதிதாக பிற்படுத்தப்பட்டோருக்கு விடுதிகள் திறக்கப்படுகின்றன. தமிழகத்தில் இப்போது 820 விடுதிகள் செயல்படுகின்றன. அவற்றில் பிற்படுத்தப்பட்டோருக்கு 444-ம், மிகப்பிற்பட்டோருக்கு 261-ம், சீர்மரபினருக்கு 115-ம் உள்ளன. ஆக ஒட்டுமொத்தமாக இந்த விடுதிகளில் மாணவர்கள் அதிகமாகத் தங்கிப் படிக்கிற காரணத்தால், இனி திறக்கப்படுகிற புதிய விடுதிகள் மாணவிகள் தங்கிப் படிக்கிற விடுதிகளாக இருக்கவேண்டுமென்ற கொள்கை அடிப்படையில், புதிதாக இப்போது மாணவியர் விடுதிகள் திறக்கப்படுகின்றன. கல்லூரி விடுதிகளைப் பொறுத்தவரையில் 82 விடுதிகளில் 57 மாணவர்களுக்கும் 25 விடுதிகள் மாணவியருக்கும்